

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (26.1.2026) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் அவர்கள் ஏற்பாட்டில் மாற்றுக்கட்சியைச் சேர்ந்த 10,000 நபர்கள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

## லேட்டாக வந்தாலும் லேட்டஸ்டாக வந்திருக்கிறார் வைத்திலிங்கம்!

# தேர்தல் நெருங்குகிறது! வெற்றியை உறுதி செய்ய நமது பணி தொடங்கட்டும்!

## தஞ்சையில் 10 ஆயிரம் பேர் கழகத்தில் இணைந்த விழாவில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

தஞ்சை, ஜன.28–

**‘‘லேட்டாக வந்தாலும் லேட்டஸ்டாக வந்திருக்கிறார் வைத்திலிங்கம் அவர்கள்’’ எனவும் ‘‘தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது; நம்முடைய பணி மும்முரமாக இருக்க வேண்டும்’’ என்றும் கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சை, செங்கிப்பட்டியில் 10 ஆயிரம் பேர் ஆதரவாளர்களுடன் இணைந்த முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்தை வரவேற்று உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

தஞ்சாவூர் மாவட்டம் - செங்கிப்பட்டியில், முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் அவர்களின் ஆதரவாளர்கள் 10,000 பேர் கழகத்தில் இணையும் நிகழ்ச்சியில், நேற்று முன்தினம் (26-01-2026), கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு :-

இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்திருக்கும் அன்புக்குரிய நண்பர்களே, செயல்வீரர்களே, அருமைத் தாய்மார்களே, உங்களை எல்லாம் நம்முடைய தஞ்சை மாவட்டக் கழகத்தின் சார்பில் நம்முடைய சந்திரசேகர் அவர்கள் வரவேற்றிருந்தாலும், தலைமைக் கழகத்தின் சார்பில் நான் உங்கள் அனைவரையும் வருக... வருக... வருக என்று வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### இணைப்பு விழா மாநாடாக நடைபெறும் நிகழ்ச்சி!

இந்த நிகழ்ச்சியில், நான் பேச வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் வருகிற வழியில் இப்படி ஒரு நிகழ்ச்சியை நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். நீங்கள் வந்து தலையைக் காட்டிவிட்டுச் சென்றால் போதும் என்றுதான் சொல்லி அழைத்து வந்தார்கள். நானும் அதே உணர்வோடுதான் இந்த நிகழ்ச்சிக்கு வந்தேன். ஆனால் வந்து பார்த்ததற்கு பிறகு, இது என்ன இணைப்பு விழாவா? இணைப்பு விழா மாநாடா? என்று எண்ணும் அளவிற்கு இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் பேசாமல் சென்றால், உங்களுக்கும் நிம்மதி இருக்காது; எனக்கும் நிம்மதி இருக்காது. அதனால், நான் தான் அவர்களிடத்தில் பேச வேண்டும் என்று வேண்டுகோளை எடுத்து வைத்து, உங்களிடத்தில் பேச வந்திருக்கிறேன்.





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (26.1.2026) தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் அவர்கள் ஏற்பாட்டில் மாற்றுக்கட்சியை சேர்ந்த 10,000 நபர்கள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்ட விழாவில் உரையாற்றினார். இந்த இணைப்பு விழாவில், கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, அமைச்சர்கள் எஸ்.எஸ். சிவசங்கர், முனைவர் கோவி. செழியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. செந்தில்பாலாஜி, நீலமேகம், தஞ்சாவூர் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் பழனிவேல், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சன். இராமநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நம்முடைய முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் அவர்கள், அண்ணா அறிவாலயத்திற்கு வந்து, தாய்க் கழகமாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, அதற்கு பிறகு, ஒரு வார காலத்திற்குள்ளாக இந்தச் சிறப்பான இணைப்பு விழா நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், உள்ளபடியே நான் எதிர்பார்த்தது; நான் எதிர்பார்த்ததைவிட அதிகமான அளவிற்கு இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு சிறப்பாக பணியாற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### விசுவாசம் மிக்கவர் வைத்திலிங்கம்!

நான் வைத்திலிங்கம் அவர்களை பல நேரங்களில் பார்த்ததுண்டு. மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள், அதைத்தொடர்ந்து அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய தலைமையில் நம்முடைய வைத்திலிங்கம் அவர்கள் பணியாற்றுகிற நேரத்தில், அவர்களுக்கு விசுவாசமாக இருந்து, சிறப்பாக - சுறுசுறுப்பாக அனைவரையும் கவரும் வகையில் அவர் பணியாற்றும் காட்சியை நான் பார்த்ததுண்டு.

ஆனால், எம்.ஜி.ஆர். அவர்கள் மற்றும் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அ.தி.மு.க. கட்சி உடைந்து, அது சின்னாபின்னமாகி இருந்த நிலையில், அப்போது அவர் சட்டமன்றத்தில் வந்து அமர்ந்திருக்கும் காட்சிகளை நான் பார்ப்பேன். அவருடைய முகத்தில் ஒரு சோர்வு இருந்து கொண்டே இருக்கும். எதையோ பறிகொடுத்ததுபோன்று உட்கார்ந்திருப்பார். ஏதோ வேண்டா வெறுப்போடு சில கேள்விகளைக் கேட்பார். ஏதோ வேண்டா வெறுப்போடு அமர்ந்திருக்கும் காட்சிகளை நான் பல நேரங்களில் சட்டமன்றத்தில் பார்த்ததுண்டு. அது என்ன என்பதை இப்போதுதான் நான் உணர்ந்து கொண்டேன். சுயமரியாதையோடு நாம் இருக்க முடியவில்லையே; சுயமரியாதையோடு நாம் பணியாற்ற முடியவில்லையே என்ற ஏக்கம் அவருடைய உள்ளத்தில் இருந்திருக்கிறது. என்ன, அவர் சற்று லேட்டாக வந்து சேர்ந்திருக்கிறார். லேட்டாக வந்தாலும் லேட்டஸ்டாக பணியாற்றப் போகிறார். இதுதான் நமக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சியை தந்து கொண்டிருக்கிறது.

எனவே, தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவ்வாறு நெருங்கும் தேர்தலில், மிகப்பெரிய வெற்றியை நாம் பெறப்போகிறோம் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

### மீண்டும் திராவிட மாடல் ஆட்சி உதயமாக சூளுரைப்போம்!

எனவே, இணைந்திருக்கும் தொண்டர்களை, ஏற்கனவே நம்முடைய வைத்திலிங்கம் அவர்களை அறிவாலயத்தில் நான் வரவேற்று மகிழ்ந்திருந்தாலும், இன்று உங்களோடு சேர்ந்து அவரையும் வரவேற்று, உங்களையும் வரவேற்று, தேர்தல் பணியாற்ற உறுதி எடுப்போம்; சபதம் ஏற்போம். மீண்டும் நம்முடைய திராவிட மாடல் அரசு உதயமாகி, ஏற்கனவே செய்திருக்கும் சாதனைகளை மிஞ்சும் அளவிற்கு மேலும் பல சாதனைகளை உருவாக்கித் தருவதற்கு, நம்முடைய பணி மும்முரமாக இருக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு, ‘வெல்வோம் 200 - படைப்போம் வரலாறு’, ‘வெல்வோம் ஒன்றாக’ என்று கூறி, மீண்டும் உங்களை தாய்க் கழகத்தின் சார்பில் வருக... வருக... வருக என்று வரவேற்கிறேன்.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரத்தில் அரசு தலைமை மருத்துவமனை புதிய கட்டிடத்தை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலு விஜயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழக தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நினைவு நாள் பொதுக்கூட்டம் திருச்சி திருவெறும்பூர் தொகுதி மாநகரம் அரியமங்கலம் பகுதியில் பால்பண்ணை சர்வீஸ் ரோட்டில் நடைபெறற்றது. இக்கூட்டத்தில் தலைமை மற்றும் சிறப்புரை மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரக் கழகச் செயலாளர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சேர்மன் மு.மதிவாணன், திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் தலைமைக் கழக பேச்சாளர்கள் செந்தலை ந.கவுதமன், சிறுவானுர் பரசுராமன், I.பாலகணபதி, கழக கலந்து கொண்டு வீரவணக்க நாள் பேருரையாற்றினார்ள். பொதுக் கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மாநில அணி நிர்வாகி செந்தில், பகுதி கழகச் செயலாளர் விஜயகுமார், மற்றும் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து பிரதிநிதிகள், கழகத் தொண்டர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.